**அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூாயில் ஏ.பி.ஜே அப்துல் கலாம் பிறந்த நாள் விழா கொண்டாட்டம்.**

அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூாயில் **ஏ.பி.ஜே அப்துல் கலாம் பிறந்தநாள் விழா** கொண்டாடப்பட்டது. இவ்விழாவிற்கு அன்னைகல்விக் குழும செயலர்**.திரு ஹுமாயூன்** அவர்கள் தலைமையேற்றார்.அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் **எஸ்.பி.மாணிக்கவாசுகி** அவர்கள் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக சாட்டை படத்தின் **இயக்குனர் திரு. அன்பழன்** அவர்கள் கலந்து கொண்டு கலாமின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து சிறப்புரை வழங்கினார். மாணவர்கள் **சரண்** மற்றும் **ராஜ்குமார்** ஏ.பி.ஜே. அப்துல் கலாமின் வாழ்க்கை நிகழ்வுகளைஎடுத்துக் கூறினர். முதலாவதாக நாட்டுநலப்பணித்ததிட்ட அலுவலர் **பேரா. சோமசுந்தரம்** வரவேற்றுப் பேசினார். அடுத்ததாக பேரணி நடைபெற்றது. இப்பேரணியை அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி **முதல்வர் முனைவர் எஸ்.பி. மாணிக்கவாசுகி** அவர்கள் மற்றும் **துணைமுதல்வர் ராஜா** அவர்களும் கொடியசைத்து தொடங்கி வைத்னர். பேரணி கல்லூரி நுழைவு வாயிலில் இருந்து புறப்பட்டு அணைக்குடி தெருக்கள் வழியாக மீண்டும் கல்லூரியைச் சென்றடைந்தது. பிறகு ஏ.பி.ஜே அப்துல் கலாம் பற்றிய கருத்தரங்கம் நடைபெற்றது. .இக்கருத்தரங்கத்தில் **இயற்பியல் துறை பேரா.ஜெயக்குமார்** அவர்கள் கலந்துகொண்டு ஏ.பி.ஜே அவர்களின் சாதனைகளை எடுத்துக் கூறினார். .இறுதியாக தமிழ்த்துறைதலைவர் **முனைவர் லொயோலாபீரீஸ்** அவர்கள் நன்றி கூறினார். விழா ஏற்பாடுகளை நாட்டுநலப் பணித் திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.




அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவிலாச்சேரி, கும்பகோணம்.
நாட்டு நலப்பணித் திட்டம்
அலகு I, II, III மற்றும்
தமிழ்த்துறை இணைந்து நடத்தும்
இளைஞர் எழுச்சி நாள்
A.P.J.அப்துல்கலாம்


கோவிலாச்சேரி, கும்பகோணம்.
இளைஞர் எழுச்சி நாள்
A.P.J.அப்துல்கலாம்